முதன்மை அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

**முன்னிலை: திருமதி K.அறிவொளி, M.A., M.L.,**

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ம் நாள் செவ்வாய்கிழமை.

**குற்றவியல் மேல்முறையீடு வழக்கு எண்.103/2024**

(*CNR.No.TNSV01002712/2024)*

| | |
|---|---|
| விசாரணை நீதிமன்றம் | நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சிவகங்கை. |
| விசாரணை நீதிமன்ற வழக்கு எண் | ஆண்டு பட்டிகை வழக்கு எண்.147/2014 |
| மேல்முறையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | தமிழ் நாடு அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய<br>குற்ற எண்.21/2013 |
| எதிர்மேல்முறையீட்டாளர்களின் பெயர் | 1. காளீஸ்வரன் (வயது 47)<br>த/பெ.தியாகராஜன்,<br>கதவு எண்:13, மஜீத் ரோடு முதல் தெரு,<br>சிவகங்கை.<br><br>2. சுரேஷ் (வயது 37)<br>த/பெ.பால்கரசு,<br>கதவு எண்.64, கண்டனி,<br>மேலசேத்தூர், சிவகங்கை.<br><br>3. வாசுதேவன் (வயது 37)<br>த/பெ.நாராயணன்,<br>கதவு எண்:.358, மஜீத் ரோடு முதல் தெரு,<br>சிவகங்கை.<br><br>4. முருகன் (வயது 38)<br>த/பெ.பொன்னையா,<br>கதவு எண்:18*A*, சாமியார்பட்டி,<br>சிவகங்கை.<br><br>5. செல்வம் (வயது 43)<br>த/பெ.சுப்பையா, |

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:53:47 +0530

| | |
|---|---|
| | 22, கக்கன் பாக்கம்,<br>அகிலாண்டபுரம், சிவகங்கை.<br><br>6. கிருஷ்ணமுத்து, (இறப்பு)<br>த.பெ.மகாலிங்கம்,<br>வெள்ளக்கரை காலனி,<br>அல்லி நகரம், திருப்புவனம்,<br>சிவகங்கை. |
| விசாரணை நீதிமன்ற தீர்ப்பு | விசாரணை நீதிமன்றம், 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி), 409, 477(*A*), 420-ன் கீழான குற்றச்சாட்டுகள் மற்றும் 2 முதல் 5 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(பி), 408, 477(*A*) உ/இ 34, 420-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால் 1 முதல் 5 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லையென தீர்மானித்து குவிமுச.248(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 முதல் 5 எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குபின் ரத்து செய்யப்படுகிறது. |
| தண்டனை உறுதிபடுத்தப்பட்டதா, மாற்றியமைக்கப்பட்டதா அல்லது ரத்து செய்யப்பட்டதா, | **இறுதியாக,** இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும், சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஆண்டுபட்டிகை வழக்கு எண்.147/2014-ல் கடந்த 09.08.2023-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| மேல்முறையீடு செய்யப்பட்ட நாள் | 31.07.2024 |
| ஆஜராகப் பணிக்கப்பட்ட நாள் | 01.10.2024 |
| இந்நீதிமன்ற தீர்ப்பு | 21.04.2026 |

இந்த குற்றவியல் மேல்முறையீடு என் முன்பு 01.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.*A*.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:53:57 +0530

வழக்கறிஞர் திரு.*M*.குருதாஸ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**தீ ர் ப் பு ரை-**

இந்த குற்றவியல் மேல்முறையீட்டில் ஆண்டு பட்டிகை வழக்கு எண்:147/2014-ல் உள்ள சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய காவல் ஆய்வாளர் மேல்முறையீட்டாளர் ஆவார்.

**2. எதிர்மேல்முறையீட்டாளர்/அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:-**

இவ்வழக்கில் சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகர், திருவள்ளுவர் தெருவில் இருக்கும் அரசு டாஸ்மாக் சில்லரை விற்பனை மதுபானக்கடை எண் 7553-ல் 25.10.2013-ம் தேதி இவ்வழக்கின் சாட்சி-1 சிவகங்கை டாஸ்மாக் லிமிட் மாவட்ட மேலாளர் திரு.இராஜேந்திரன் அவர்கள் உத்தரவுப்படி சாட்சி-2, டாஸ்மாக் தாசில்தார் திருமதி.விஜயகுமாரி மற்றும் ஆடிட்டர் உதவியாளர்கள் ஹரிகரன், குமார் இவர்களுடன் சாட்சி-1 தணிக்கை குழுவாக சென்று மேற்படி மதுபான கடையை நூறு சதவீத (100%) மாதாந்திர தணிக்கை மேற்கொண்ட போது தணிக்கை இறுதியில் சரக்கு வரவு, இருப்பு மற்றும் விற்பனை தொகையில் வங்கியில் செலுத்தாமல் ரூபாய் 55,49,920/- குறைவு தொகையை மேற்படி டாஸ்மாக் கடையில் பணிபுரிந்த மேற்பார்வையாளர் 1-வது எதிரி காளீஸ்வரன், மேற்படி கடையின் விற்பனையாளர்கள், 2-வது எதிரி சுரேஷ், 3-வது எதிரி வாசுதேவன், 4-வது எதிரி

முருகன், 5-வது எதிரி செல்வம், 6-வது எதிரி கிருஷ்ணமுத்து ஆகியோர் ஒன்று சேர்ந்து கையாடல் செய்து, கையாடல் செய்த பணத்தை எதிரிகள் அனைவரும் பகிர்ந்துகொண்டும், டாஸ்மாக் மாவட்ட நிர்வாகத்திற்கு ஒப்படைக்க வேண்டிய அரசு ஆவணங்களை ஒப்படைக்காமலும் டாஸ்மாக் நிர்வாகத்திற்கு சேரவேண்டிய அரசு பணம் ரூ.55,49,920/- யை கையாடல் செய்து குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்து குற்றம் புரிந்துள்ளதாக 1-வது எதிரி மீது இதச பிரிவுகள் 406, 408, 409, 477(*A*), 420, 120(*b*)-ன் கீழும், 2 முதல் 6 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 406, 409, 477(*A*), 420, 120(*b*)-ன் கீழும் சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்றுப் பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**4.** விசாரணை நீதிமன்றம், 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி), 409, 477(*A*), 420-ன் கீழான குற்றச்சாட்டுகள் மற்றும் 2 முதல் 5 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(பி), 408, 477(*A*) உ/இ 34, 420-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால் 1 முதல் 5 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லையென தீர்மானித்து குவிமுச.248(1) பிரிவின் கீழ் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தண்டனைத் தீர்ப்பில்

குறைவுற்றதாக கருதிய மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**5. மேல்முறையீட்டுக் குறிப்பாணையின் சுருக்கம்:**

*i)* விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்ட விதிகளுக்கு புறம்பாகவும் சாட்சிய சட்டத்திற்கு முரணாகவும் பகரப்பட்டுள்ளது.

*ii)* மேற்படி விசாரணை நீதிமன்றம் வனையப்பெற்ற குற்றச்சாட்டுகளில் கண்டுள்ள சரத்துகளின் படி புகாரும் முதல் விசாரணையும் அமைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு எதிரிகளுக்கு குற்றவாளிகள் என தீர்மானித்து தீர்ப்பு வழங்கியிருக்க வேண்டும். மேற்படி பிரிவுகளின் கீழ் விசாரணை நீதிமன்றம் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டிருந்த போதும் அதனை மெய்ப்பிக்கும் விதமாக அரசு தரப்பு சாட்சிகள் தனது சாட்சியத்தில் சொல்லப்பட்டிருந்த நிலையில் மேற்படி குற்றப் பிரிவுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளன என கருத்தில் கொண்டு விசாரணை நீதிமன்றம் இந்த எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து தண்டனை வழங்கியிருக்க வேண்டும்.

*iii)* மேலும் புகார்தாரர் தனது புகாரில் கடந்த 25.10.2013-ம் தேதி டாஸ்மாக் கடை எண்:7553-ல் சரக்குகளின் எண்ணிக்கை பற்றி தணிக்கை செய்த போது அங்கு மேற்பார்வையாளராக பணிபுரிந்த எதிரி ரூ.55,49,920/- பணம் அரசிற்கு செலுத்தாமல் கையாடல் செய்த விபரம் தெரிய வந்து புகார் அளிக்கப்பட்டு அதன்படி மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் குற்ற எண்.21/2013 என இதச பிரிவுகள் 409, 408, 477(*A*), 420-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:54:23 +0530

வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டு 2, 3 எதிரிகளை கைது செய்து ஒப்புதல் சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து 2, 3 எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி மற்ற சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்று பின்பு இதச பிரிவுகள் 409, 408, 477(*A*), 420, 120(பி)-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*iv)* மேற்படி விசாரணை நீதிமன்றம் இதச பிரிவுகள் 409, 408-ன் படியான குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ள நிலையில் மேற்படி பிரிவு பொது ஊழியர் அல்லது வங்கியர், வணிகர், தரகு வணிகர், தரகர், அட்டர்னி அல்லது முகவர் என்பவரின் தொழில்முறையில் எந்த வகையிலாவது ஒரு சொத்தின் மீது அந்த சொத்தைப் பொறுத்து குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்கின்ற நபர் தண்டிக்கப்பட வேண்டிய நபர் ஆவார். மேலும் பிரிவு 405 இதச படி பொது ஊழியர் எந்த முறையிலும் ஒரு சொத்து ஒப்படைக்கப்பட்டிருந்தது அல்லது சொத்தின் மீது ஆதிக்கம் பெற்றிருந்த அந்த சொத்தை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்கின்ற அல்லது அந்த சொத்தை தனது சொந்த உபயோகத்திற்கு மாற்றுகிற நபர் குற்றமுறு நம்பிக்கை மோசடி செயலில் ஈடுபட்ட நபர் ஆகிறார்.

*v)* மேற்படி பிரிவின் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட 1 முதல் 5 எதிரியானவர்கள் பொது ஊழியர்கள் என்ற நிலையில் அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்த சொத்தினை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்து குற்றமும், நம்பிக்கை மோசடி செயலில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டு நிரூபணம் ஆகியுள்ள நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி பிரிவுகள் 409, 408 இதசவின் கீழ் குற்றவாளிகள்

என தீர்மானித்து எதிரிகளுக்கு தண்டனை வழங்கியிருக்க வேண்டும். அதை தவிர்த்து மாறாக விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

*vi)* மேற்படி பிரிவு 120(பி) குற்றம் சுமத்தப்பட்டுள்ள குற்றம் ஒரு சதி என்றால் இரண்டு அல்லது இருவருக்கும் மேற்பட்ட நபர்கள் சட்டத்திற்கு முரணான ஒரு செயலை அல்லது சட்டத்திற்கு முரணான வழியில் சட்டத்திற்கு முரண் அல்லாத ஒரு செய்கையை செய்ய உடன்படும் போது அத்தகைய உடன்படிக்கை குற்றம் ஒரு சதி என வழங்கப்படும். மேற்படி வழக்கில் 2 முதல் 5 எதிரிகள் சதி செய்து ரூ.55,49,420/- கையாடல் செய்துள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை கருத்தில் கொள்ளாது விசாரணை நீதிமன்றம் மேற்கண்ட 1 முதல் 5 வரையிலான எதிரிகளை விடுதலை செய்திருப்பது சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்புடையதல்ல.

*vii)* மேற்படி பிரிவு 420 இதச ஏமாற்றுதல் மற்றும் ஏமாற்றும் செயலில் ஈடுபட்டு அதன் மூலம் ஏமாற்றப்பட்ட நபரை ஒரு பொருளை கொடுப்பதற்கு அல்லது மாற்றம் செய்வதற்கு நேர்மையற்ற முறையில் தூண்டி இருக்க வேண்டும் அல்லது மற்றொருவரை தூண்டும் நேரத்தில் எதிரியின் குற்ற மனம் ஒரு காரணியாக கருத வேண்டும் என்று கூறியுள்ள நிலையில், மேற்படி வழக்கில் 1 முதல் 5 வரையிலான எதிரிகள் அரசாங்கத்திற்கு கேடு விளைவிக்கும் விதமாகவும் அரசாங்கத்தை ஏமாற்றும் விதமாகவும், அரசாங்கத்திற்கு இழப்பீடு ஏற்படுத்தும் விதமாக ரூ.55,49,920/- லட்சம் பணத்தை நேர்மையற்ற முறையில் அனைவரும் சேர்ந்து குற்ற மனத்துடன் அரசுக்கு செலுத்தாமல் தனது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தி வந்த நிலையில் மேற்படி சங்கதிகளை அரசு தரப்பினர் விசாரணை நீதிமன்றத்தில்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:54:39 +0530

சாட்சியங்கள் மூலமும், ஆவணங்கள் மூலமும் தெள்ளத் தெளிவாக தெளிவுபடுத்தி உள்ள நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி குற்றச்சாட்டினை ஏற்காமல் அதற்கு மாறாக மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து 1 முதல் 5 வரையிலான எதிரிகளை விடுவித்து இருப்பது சட்டத்திற்கு புறம்பாக உள்ளது.

*viii)* மேலும் பிரிவு 477(*A*) ஒரு அலுவலர் மற்றும் ஊழியர் நிலையிலிருந்து வேண்டுமென்று மோசடி செய்யும் உட்கருத்துடன் வேலை தரும் நபருக்கு சொந்தமான அல்லது அவரது கைவசம் உள்ள அல்லது வேறு தரும் நபருக்கு அல்லது அவருக்கு சார்பாக தான் பெற்றிருக்கிற ஒரு பெருமதியான பத்திரம் அல்லது கணக்கு எதனையும் அளிக்க மாற்றுகிற பங்கப்படுத்துகிற அல்லது பொய்யாக்குகிற அல்லது வேண்டுமென்றே மோசடி செய்யும் உட்கருத்துடன் பொய் குறிப்பு எழுதுகிற அல்லது அப்படி எழுதுவதற்கு உடந்தையாக இருக்கிற அத்தகைய தாள் புத்தகம் கணக்கும் ஏதேனும் முக்கியமான குறிப்பை விட்டுவிடுகிற மாற்றுகிற அல்லது விட்டுவிட அல்லது மாற்ற உதவியாக இருக்கிற எவர் ஒருவரும் தண்டிக்க வேண்டியது என குறிப்பிட்டுள்ள நிலையில், மேற்படி குற்றச்சாட்டுகளை 1 முதல் 5 வரை எதிரிகள் ரூ.55,49,920/- கையாடல் செய்து அதனை மறைக்கும் விதமாக ஆவணங்களை அரசுக்கு எதிராக உட்கருத்துடன் மாற்றிஅமைத்து மேற்படி அரசுக்கு இழப்பீடு ஏற்படுத்தும் விதமாக ரூ.55,49,920/- பணத்தினை கையாடல் செய்துள்ள சூழ்நிலையில் மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரிகளை தண்டிக்காமல் மாறாக விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:54:47 +0530

21.04.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

*ix)* மேற்படி 1 முதல் 5 எதிரிகள் டாஸ்மார்க் கடை 7553-ல் பணிபுரிந்ததாக அரசு தரப்பு சாட்சியங்கள் எதுவும் இல்லை என கருதி மேற்படி எதிரிகளை மேற்சொன்ன குற்றச்சாட்டுகளிலிருந்து விசாரணை நீதிமன்றம் விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல. மேலும் 1 முதல் 5 வரையிலான எதிரிகள் அரசு மதுபான கடை ஊழியர்களாக பணிபுரிந்துள்ள நிலையில் மேலும் அவர்கள் பணிபுரிந்து வழக்கு சம்பவம் நடைபெற்ற காலக்கட்டத்தில் அரசுக்கு கேடு விளைவிக்கும் விதமாக ரூ.55,49,920/- கையாடல் செய்துள்ள ஆவணங்கள் மூலமாகவும் சாட்சியங்கள் மூலமாகவும் அரசு தரப்பில் சமூகம் நீதிமன்றத்தில் நிரூபணம் செய்துள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை கருத்தில் கொள்ளாது விசாரணை நீதிமன்றம் மேற்கண்ட 1 முதல் 5 வரையிலான எதிரிகளை விடுதலை செய்திருப்பது சட்டப்படி நியாயப்படியும் ஏற்புடையதல்ல.

*x)* மேற்படி வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு நிரூபணம் செய்யும் விதமாகவும் மேற்படி குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்கும் விதமாகவும் விசாரணை நீதிமன்றத்தில் சாட்சியத்தில் தெள்ளத் தெளிவாக சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் மேற்படி விசாரணை நீதிமன்றம் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்து 1 முதல் 5 எதிரிகளுக்கு குற்றவாளிகள் என தீர்மானித்து தீர்ப்பு பகரப்பட்டிருக்க வேண்டும்.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:54:55 +0530

21.04.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

*xi)* மேலும் அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 தனது சாட்சியத்தில் டாஸ்மாக் கடை எண்:7553-ல் தணிக்கை செய்ததையும் மேற்படி தணிக்கை செய்யும் போது அரசுக்கு செலுத்த வேண்டிய ரூ.55,49,920/- பணத்தினை எதிரியானவர்கள் வங்கியில் செலுத்தாமல் கையாடல் செய்துள்ளது தெரியவந்ததன் அடிப்படையில் உடனடியாக தனது உயர்அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி எதிரிகள் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்து அதன் பெயரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு மேற்படி வழக்கு வாதியால் குற்றப் பத்திரிக்கை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*xii)* மேற்படி டாஸ்மாக் கடை எண்.7553-ல் எதிரி ரூ.55,49,920/- பணம் கையாடல் செய்தது அதற்கான ஆவணங்கள் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அத்துடன் மேற்படி ஆவணங்களை ஊர்ஜிதம் செய்யும் விதமாக மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்த பின்னீடு இந்த எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து தீர்ப்பு வழங்கியருப்பது சட்டத்திற்கு முரணாக உள்ளது.

*xiii)* மேலும் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் எதிரியானவர்கள் கையாடல் நடைபெற்ற டாஸ்மாக் கடையில் 1-ம் எதிரி மேற்பார்வையாளராகவும், 2 முதல் 5 வரையிலான எதிரிகள் விற்பனையாளராகவும் பணிபுரிந்தார்கள் என்றும், மேற்படி டாஸ்மாக் கடை எண்.7553-ல் எதிரி ரூ.55,49,920/- பணம் கையாடல் நடைபெற்ற விவரத்தையும் தாங்கள் தணிக்கையின் போது அறிந்ததாகவும், அதன்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:55:04 +0530

பின்னீடு எதிரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டு மேற்படி கடையின் பொறுப்புகளை ஏற்று மேற்பார்வையாளர்களாக பணிபுரிந்து வந்ததாகவும், விசாரணை நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் டாஸ்மாக் கடை எண்.7553-ல் வழக்கு சம்பவம் நடைபெற்றதையும் எதிரியானவர்கள் அரசு தரப்பில் 1-ம் எதிரி மேற்பார்வையாளராகவும், 2 முதல் 5 வரையிலான எதிரிகள் விற்பனையாளராகவும் பணிபுரிந்ததையும் ஊர்ஜிதப்படுத்தி அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் விசாரணை நீதிமன்றம் எதிரியானவர்கள் சான்றாவணமாக அரசு தரப்பில் ஒப்படைக்கப்படவில்லை. மேலும் அரசு தரப்பில் ஆவணங்கள் இல்லை எதிரிகளுக்கு என்னென்ன பணி செய்ய வேண்டும் என நிபந்தனைகள் ஆணைகள் ஏதும் பிறப்பிக்கப்படவில்லை என கருதி மேற்படி 1 முதல் 5 வரையிலான எதிரியானவர்களை மேற்படி டாஸ்மாக் கடையில் பணிபுரிந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என கருதி விசாரணை நீதிமன்றம் மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரிகளை குற்றமற்றவர்கள் என தீர்மானித்து போதிய ஆவணங்கள் இல்லை என கருதி விடுதலை செய்திருப்பது சட்டத்திற்கு புறம்பாக உள்ளது.

*xiv)* மேலும் அரசு தரப்பில் எதிரிகள் கையாடல் செய்ததற்கான ஆவணங்களை விசாரணை நீதிமன்றத்தில் முறையாக சமர்ப்பித்து மேலும் எதிரிகள் பணிபுரிந்த டாஸ்மாக் கடைக்கு முந்தைய மாதத்திற்கு சரக்குகள் இருப்பு மற்றும் எதிரிகள் வேலை பார்த்த கடைக்கு சரக்குகள் அனுப்பப்பட்ட விவரங்கள் மற்றும் விற்பனை செய்யப்பட்ட விவரங்கள் மேலும் எதிரிகள் ரூ.55,49,920/- பணம்

கையாடல் செய்த பணத்தின் கணக்குகள் ஆவணங்களாக அரசு தரப்பில் நீதிமன்றத்தில் ஒப்படைத்து அதற்கான சாட்சியத்தை நிரூப்பிக்கும் விதமாக சாட்சியம் விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பு வழக்கிற்கு வலுவூட்டிய நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி ஆவணங்களையும் கருத்தில் கொள்ளாது எதிரிகளை விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

*xv)* மேலும் எதிரிகள் அரசு ஊழியர்கள் என்பதை நிரூபிக்கும் விதமாக அரசு தரப்பு சாட்சியம் சான்றாவணங்கள் முன்னிறுத்தப்படவில்லை என்றும், மேலும் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் கடமைகள் குறித்து அரசு தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை எனவும் எதிரிகள் கடைக்கு மேற்பார்வையாளர், விற்பனையாளர் என்ற முறையில் அதிகாரம் வழங்கப்பட்டதை காண்பிக்கும் விதமாக அரசு தரப்பு ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாதது அரசு தரப்பு வழக்கிற்கு சந்தேகம் அமைந்துள்ளது என மேற்படி கடை 7553-ல் பணிபுரிந்த ஊழியர்களை அரசு தரப்பு விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகளுக்கும் மேற்பார்வையாளர் என்ற முறையில் வழங்கப்பட்ட அதிகாரத்தை எதிரிகள் தவறாக பயன்படுத்தி கையாடல் செய்துள்ளார்கள் என்பதை நிரூபிக்கும் விதமாக அரசு தரப்பு சாட்சியோ, சான்றாவணங்களோ முன்னிறுத்தப்படவில்லை என எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என விசாரணை நீதிமன்றம் தீர்மானித்து இருப்பது சட்ட விதிகளுக்கு முரணாக உள்ளது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:55:22 +0530

21.04.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

*xvi)* மேலும் எதிரிகள் தரப்பில் மேற்படி வழக்கினை எதிரிகள் குற்றமற்றவர்கள் என விசாரணை நீதிமன்றத்தில் நிரூபணம் செய்வதற்கு எவ்வித சாட்சியங்களும், சான்றாவணங்களும் முன்னிறுத்தப்படாத சூழ்நிலையிலும் மேலும் எதிரிகள் மேற்படி கடையில் மேலாளராக பணி புரியவில்லை என எவ்வித சான்றாவணங்களையும், சாட்சியங்களையும் விசாரணை நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்படாத சூழ்நிலையில் மேற்படி விசாரணை நீதிமன்றம் தாமாக முன்வந்து எதிரிகள் மேற்படி கடையில் பணிபுரியவில்லை என தீர்மானித்து அதற்கான ஆவணங்களை அரசு தரப்பில் தாக்கல் செய்யவில்லை என தீர்மானித்து மேற்படி எதிரிகளை விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

*xvii)* மேலும் அரசு தரப்பில் 1 முதல் 5 வரையிலான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு அரசு தரப்பு சான்றாவணங்கள் 1 முதல் 12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு மேற்படி 1-ம் எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி), 409, 477(*A*), 420 மற்றும் 2 முதல் 5 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(பி), 408, 477(*A*) உ/இ 34, 420 பிரிவுகளின் படி குற்றம் புரிந்ததாக சாட்சியங்கள் மூலமும், சான்றாவணங்கள் மூலமும் தெள்ளத் தெளிவாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில் எதிரிகளையும், 1-ம் எதிரி மேற்பார்வையாளராகவும், 2 முதல் 5 எதிரிகள் விற்பனையாளராகவும் பணிபுரிந்து ரூ.55,49,920/- பணம் கையாடல் செய்து மேற்படி பணத்தினை அரசிற்கு செலுத்தாமல் தனது சொந்த செலவிற்கு செலவு செய்து வந்துள்ளார்கள் என்ற கருத்தில் கொண்டு மேற்படி எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து தண்டனை

வழங்கி இருக்க வேண்டுமே தவிர மாறாக விடுதலை செய்திருப்பது சட்ட விதிகளுக்கு முரணாக உள்ளது.

*xviii)* மேற்படி மதுபான கடையில் 1-ம் எதிரி மேற்பார்வையாளராகவும், 2 முதல் 5 வரையிலான எதிரிகள் விற்பனையாளராகவும் பணிபுரிந்து ரூ.55,49,920/- பணம் கையாடல் செய்து செய்த பணம் இன்று வரை எதிரிகள் வசம் உள்ள நிலையில் மேற்படி ரூ.55,49,920/- பணம் இன்று வரை அரசிற்கு பெரும் இழப்பினை ஏற்படுத்தியுள்ள நிலையில், மேற்படி விசாரணை நீதிமன்றம் இழப்பு ஏற்பட்டது உண்மை என அரசு தரப்பு ஆவணங்கள் மூலம் தெரிய வருவதாகவும் ஊர்ஜிதம் செய்துவிட்டு 1 முதல் 5 வரையிலான எதிரிகள் அரசு பணி செய்ததற்கு அரசு தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என கருதி 1 முதல் 5 வரையிலான எதிரிகளை விசாரணை நீதிமன்றம் விடுதலை செய்திருப்பது சட்டத்திற்கு புறம்பாக உள்ளது.

எனவே, மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மேல்முறையீட்டினை கோப்பிற்கு எடுத்து, சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2-ல் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.147/2014-ல் கடந்த 09.08.2023-ம் தேதியன்று வழங்கிய தீர்ப்பை நீக்கரவு செய்து இந்த மேல்முறையீட்டை அனுமதித்து உத்தரவிட வேண்டி இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6. இந்த மேல்முறையீட்டில் தீர்வுக்குரிய பிரச்சினைகள்:-**

1 விசாரணை நீதிமன்றம் எதிரிகள் மீதுள்ள குற்றச்சாட்டான இதச

பிரிவுகள் 120(பி), 408, 409, 477(*A*) உ/இ 34, 420-ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று கண்டுணர்ந்திருப்பது சரியானதா?

2 விசாரணை நீதிமன்றமான சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஆண்டு பட்டிகை வழக்கு எண்.147/2014-ல் கடந்த 09.08.2023-ம் தேதியன்று இவ்வழக்கு எதிரிகள்/ எதிர்மேல்முறையீட்டாளர்களை விடுதலை செய்து பிறப்பித்த தீர்ப்பு ரத்து செய்யத்தக்கதா அல்லது நிலைநிறுத்தத்தக்கதா? அல்லது மாற்றியமைக்கத்தக்கதா?

3 இந்த குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

**பிரச்சனைகள் : 1 முதல் 3:-**

**7)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகர், திருவள்ளுவர் தெருவில் இருக்கும் அரசு டாஸ்மாக் சில்லரை விற்பனை மதுபானக்கடை எண் 7553-ல் 25.10.2013ம் தேதி இவ்வழக்கின் சாட்சி-1 சிவகங்கை டாஸ்மாக் லிமிட் மாவட்ட மேலாளர் திரு.இராஜேந்திரன் அவர்கள் உத்தரவுப்படி சாட்சி-2, டாஸ்மாக் தாசில்தார் திருமதி.விஜயகுமாரி மற்றும் ஆடிட்டர் உதவியாளர்கள் ஹரிகரன், குமார் இவர்களுடன் சாட்சி-1 தணிக்கை குழுவாக சென்று மேற்படி மதுபான கடையை நூறு சதவீத (100%) மாதாந்திர தணிக்கை மேற்கொண்ட போது தணிக்கை இறுதியில் சரக்கு வரவு, இருப்பு மற்றும் விற்பனை தொகையில் வங்கியில் செலுத்தாமல் ரூபாய் 55,49,920/- குறைவு தொகையை மேற்படி டாஸ்மாக் கடையில் பணிபுரிந்த மேற்பார்வையாளர் 1-வது எதிரி

காளீஸ்வரன், மேற்படி கடையின் விற்பனையாளர்கள், 2-வது எதிரி சுரேஷ், 3-வது எதிரி வாசுதேவன், 4-வது எதிரி முருகன், 5-வது எதிரி செல்வம், 6-வது எதிரி கிருஷ்ணமுத்து ஆகியோர் ஒன்று சேர்ந்து கையாடல் செய்து, கையாடல் செய்த பணத்தை எதிரிகள் அனைவரும் பகிர்ந்துகொண்டும், டாஸ்மாக் மாவட்ட நிர்வாகத்திற்கு ஒப்படைக்க வேண்டிய அரசு ஆவணங்களை ஒப்படைக்காமலும் டாஸ்மாக் நிர்வாகத்திற்கு சேரவேண்டிய அரசு பணம் ரூபாய் 55,49,920/-யை கையாடல் செய்து குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்து குற்றம் புரிந்துள்ளதாக 1-வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(*b*), 409, 477(*A*), 420-ன் கீழும், 2 முதல் 6 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(*b*), 408, 477(*A*) உ/இ 34, 420-ன் கீழும் குறிப்பிட்டு எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**8)** இருதரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்து விசாரணை நீதிமன்றம் 1-வது எதிரி மீது இதச பிரிவுகள் 120(பி), 409, 477(*A*), 420-ன் கீழான குற்றச்சாட்டுகள் மற்றும் 2 முதல் 5 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(பி), 408, 477(*A*) உ/இ 34, 420-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால் 1 முதல் 5 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லையென தீர்மானித்து குவிமுச 248(1) பிரிவின் கீழ் தீர்ப்பு வழங்கியுள்ளது. இவ்வழக்கில் 6-வது எதிரி வழக்கு நிலுவையில் இருந்த நிலையில் இறந்துவிட்டார் என்பதால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அற்றுப்போய் விட்டன. மேற்படி தண்டனைத் தீர்ப்பில் குறைவுற்றதாக கருதிய மேல்முறையீட்டாளர் இந்த குற்றவியல் மேல்முறையீட்டை

தாக்கல் செய்துள்ளார்.

**9)** இவ்வழக்கில் உள்ள சாட்சியங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ள அ.சா.1 திரு.இராஜேந்திரன் என்பவர் தணிக்கைக்கு தணிக்கை குழுவுடன் நேரில் சென்று ஆவணங்கள் அனுப்ப உத்தரவிட்டது பற்றியும், புகார் கொடுத்தது பற்றியும் கூறும் சாட்சி. அ.சா.2 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் சாட்சி-1ன் உத்தரவுப்படி தணிக்கைக்கு தணிக்கை குழுவுடன் சென்றது பற்றி கூறும் சாட்சி. அ.சா.6, அ.சா.7 மற்றும் அ.சா.9 எதிரிகள் கையாடல் செய்ததற்கான ஆவணங்களை சாட்சி-8 உத்தரவுப்படி அனுப்பியது பற்றி கூறும் சாட்சிகள் ஆவார்கள். அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 25.10.2013-ம் தேதி அன்று சிவகங்கை டாஸ்மாக்கில் மாவட்ட மேலாளராக பணிபுரிந்து வந்த பொழுது சிவகங்கை நகரில் உள்ள கடை எண்:7553-ஐ தணிக்கை குழுவினர் தணிக்கை செய்ததன் அடிப்படையில் மீண்டும் அன்றைய தினமே அலுவலக குழுவினருடன் மீண்டும் தான் சென்று கடை இருப்பு மற்றும் அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்ததில் ரூ.55,49,920/- இருப்பு குறைவு இருந்தது என்றும், அதன் பேரில் மேற்படி கடையின் சூப்பர்வைசர் 1-ம் எதிரி காளிஸ்வரன் மற்றும் விற்பனையாளர்கள் 5 பேர்கள் ஆகியோர்கள் முழுப் பொறுப்பு என்று சிவகங்கை நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும், அந்த புகார் தன்னிடம் காட்டப்படுவது தான் என்றும், அதிலுள்ள கையெழுத்தும் தன்னுடையது தான் என்றும், புகார் அசாஆ.1 என்றும், அந்த புகாருடன் தான் சில ஜெராக்ஸ் ஆவணங்களை இணைத்திருந்தேன் என்றும், விசாரணையின் போது தான் எந்த

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:56:12 +0530

ஆவணத்தையும் ஒப்படைக்கவில்லை என்றும், தனக்கு பின்பு வந்த அதிகாரி தான் வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை அளித்துள்ளார் என்றும், அந்த ஆவணங்கள் அனைத்தும் தான் ஆய்வு செய்து முடிவு செய்து புகார் அளித்தது சம்பந்தப்பட்டவை தான் என்றும், 25.10.2013 ம் தேதி டாஸ்மாக் கடை எண் 7553 ல் 100% தணிக்கை செய்த ஆய்வறிக்கை *(P.V.Report)* அசாஆ.2, டாஸ்மாக் கடை எண்:7553-ல் 01.10.2013-ம் தேதி சரக்கு இருப்பு தொகை விபரம் அ.சா.ஆ.3, டாஸ்மாக் மதுபான சில்லரை விற்பனை கடை எண்:7553-க்கு 01.01.2011-ம் தேதி முதல் 29.10.2013-ம் தேதி வரை அனுப்பிய சரக்குகளின் விபரம் *(Details of Invoice)* அசாஆ.4, 01.01.2011 முதல் 25.10.2013-ம் தேதி வரை டாஸ்மாக் கடை எண்:7553-ல் தணிக்கையாளர் தணிக்கை செய்த ஆய்வறிக்கை *(P.V.Report)* அசாஆ.5, டாஸ்மாக் கடை எண்:7553-ல் 25.10.2013-ம் தேதி தணிக்கையின் போது இருந்த சரக்குகளின் விபரம் அ.சா.ஆ.6, 01.01.2011 முதல் 25.10.2013-ம் தேதி வரை டாஸ்மாக் கடை எண்:7553-ல் சரக்கு விற்பனை செய்த பணத்தை வங்கியில் செலுத்திய விபரம் அ.சா.ஆ.7, 25.10.2013-ம் தேதி டாஸ்மாக் கடை எண்:7553-ல் தணிக்கை முடிந்து 1-ம் எதிரி காளீஸ்வரன் டாஸ்மாக் மேலாளர் அவர்களிடம் இருப்பு குறைவிற்கான காரணத்தை கைப்பட எழுதிக் கொடுத்த கடிதம் அ.சா.ஆ.8, 25.10.13-ம் தேதி டாஸ்மாக் கடை எண்:7553-ல் தணிக்கைக்கு பின்பு மேற்பார்வையாளராக பணிப்பொறுப்பேற்ற மணிவண்ணன் மற்றும் வெங்கடேசன் ஆகியோர்கள் எழுதிக் கொடுத்த கடித நகல்கள் அ.சா.ஆ.9, அரசு மதுபானக்கடையின் 100% தணிக்கை அறிக்கையின் விளக்க நகல் அ.சா.ஆ.10 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:56:22 +0530

**10)** மேலும் அ.சா.2 தனது சாட்சியத்தில் கடந்த 2013-ம் ஆண்டு சிவகங்கை மாவட்ட டாஸ்மாக் அலுவலகத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வந்த போது சிவகங்கை டவுனில் உள்ள கடை எண்:7553 என்ற டாஸ்மாக் கடையை 100 சதவிகித தணிக்கைக்காக மாவட்ட மேலாளர் ராஜேந்திரன், அவருடன் ஆடிட்டர் ஹரிகரன், குமார் ஆகியோர்கள் சென்று கடந்த 25.10.2013-ம் தேதி கணக்கு மற்றும் கையிருப்பு ஆகியவற்றை தணிக்கை செய்த பின்பு அதில் ரூ.59,49,920/- சார்ட்டேஜ் ஆக இருந்ததாக தனக்கு தகவல் வந்ததன் பேரில் தான் அங்கு சென்றேன் என்றும், மீண்டும் அங்கு ஆய்வு மேற்கொண்டு அவர்கள் சொன்னது உண்மை என்பதை அறிந்து கொண்டேன் என்றும், அதன் பிறகு அந்த கடையில் வேலை பார்த்து வந்த 1-வது எதிரி காளிஸ்வரன், 3-வது எதிரி வாசுதேவன், 4-வது எதிரி முருகன் மற்றும் அங்கிருந்தவர்களை இது சம்பந்தமாக விசாரித்தேன் என்றும், அவர்கள் அதற்கு இவ்வாறு சரக்கு மற்றும் கணக்கு விவரங்களில் குறைபாடு உள்ளதற்கு தாங்கள் பொறுப்பு என்று தன்னிடமும், மாவட்ட மேலாளர் ராஜேந்திரனிடமும் ஒத்துக் கொண்டார்கள் என்றும், அதன் பிறகு தாங்கள் அலுவலகத்திற்கு வந்து விட்டோம் என்றும், இவ்வழக்கு சம்பந்தமாக தன்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும், ஆஜர் எதிரிகள் தான் அந்த சமயத்தில் அந்த டாஸ்மாக் கடையில் வேலை பார்த்தவர்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11)** மேலும், இவ்வழக்கில் அ.சா.3 மற்றும் அ.சா.4 தங்களது சாட்சியத்தில் கடந்த 25.10.2013-ம் தேதி 7553 என்ற எண் கொண்ட டாஸ்மாக் கடையை ஆய்வு செய்து ஆடிட் பார்த்தோம் என்றும், தங்களது ஆடிட்டர்

ஆர்.சிதம்பரம் என்பவர் தங்களது மேலதிகாரி அன்றைய தினம் மாவட்ட மேலாளர் ராஜேந்திரன் சொல்லி தான் ஆய்வு செய்தோம் என்றும், ஆய்வின் பொழுது ரூ.55,49,920/- கையிருப்பில் சார்டேஜ் இருந்தது என்றும், அப்பொழுது தங்களது ஆடிட்டர் ஆர்.சிதம்பரமும், மாவட்ட மேலாளர் ராஜேந்திரனும் அங்கு வந்துவிட்டார்கள் என்றும், இது சம்பந்தமாக டாஸ்மாக்கில் இருந்த ஊழியர்களிடம் விசாரணை நடத்தினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**12)** மேலும், இவ்வழக்கில் அ.சா.5 தனது சாட்சியத்தில் கடந்த 2013-ம் ஆண்டு எண்.7552 கடையில் வேலை பார்த்து வந்தேன் என்றும், அந்த சமயம் கடை எண்.7553-ல் கூடுதல் பொறுப்பாக அன்றும் மேற்பார்வையாளராக பொறுப்பேற்றுக் கொண்டேன் என்றும், இந்த வழக்கின் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் எண்.7553 கடையில் வேலை பார்த்து வந்தவர்கள் என்றும், போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**13)** மேலும் அ.சா.6 தனது சாட்சியத்தில் கடந்த 2013-ம் ஆண்டு சிவகங்கை மாவட்ட டாஸ்மாக்கில் அக்கவுண்ட் உதவி மேலாளராக பணிபுரிந்து வந்தேன் என்றும், கடந்த 25.10.2013-ம் தேதி ஆடிட்டர் உதவியாளர்கள் திரு.ஹரிஹரன், குமார் ஆகியோர்கள் கடை எண் 7553-ஐ ஆய்வு செய்து சார்ட்டேஜ் இருப்பதாக இரவு 8.30 மணியைபோல் மாவட்ட மேலாளர் இராஜேந்திரனுக்கு போன் செய்தார்கள் என்றும், அந்த கடையில் ரூ.55,49,920/- சரக்கு சாட்டேஜாக இருந்ததாகவும் மேலாளர் இராஜேந்திரன் தன்னிடம் சொன்னார்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:56:40 +0530

என்றும், அந்த கடை சம்மந்தப்பட்ட ஆடிட்டர் ரிப்போட்டுகள் மாவட்ட மேலாளர் மூலமாக தன் வசம் வந்தது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**14)** மேலும் அ.சா.7 தனது சாட்சியத்தில் தான் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக இருந்து வருகிறேன் என்றும், இந்த வழக்கின் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், கடந்த 25.10.2013-ம் தேதி சிவகங்கையிலுள்ள கடை எண் 7553 என்ற டாஸ்மாக் கடையில் மாவட்ட மேலாளர் தலைமையில் ஆய்வு நடைபெற்றதாக தான் கேள்விப்பட்டேன் என்றும், அந்த கடையில் வேலை பார்த்த நபர்கள் மூலமாக அந்த கடையில் சரக்கு கையிருப்பில் குறைவு இருப்பதாகவும் தான் கேள்விப்பட்டேன் என்றும், தனது அலுவலகத்தில் வேலை பார்த்து வந்த திரு.முடியப்பனை போலிசார் விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**15)** மேலும் இவ்வழக்கின் அ.சா.8 தனது சாட்சியத்தில் கடந்த 2015-ம் ஆண்டு அரசு பணியில் துணை ஆட்சியராக இருந்து ஓய்வு பெற்றுள்ளேன் என்றும், கடந்த 2014-ம் ஆண்டு சிவகங்கை மாவட்ட டாஸ்மாக் பிரிவில் மாவட்ட மேலாளராக பணிபுரிந்து வந்தேன் என்றும், இந்த வழக்கின் எதிரிகளை தான் இதற்கு முன்பு பார்த்ததில்லை என்றும், இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவைகள் அனைத்தும் கடந்த 2013-ம் ஆண்டு நடந்தது என்றும், ஆனால் இந்த வழக்கின் புலன் விசாரணையின் போது தன்னை இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி விசாரித்தார் என்றும், தனது அலுவலகத்தில் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை தன்னிடம் கேட்டார் என்றும், தான் சான்றொப்பமிட்டு அவர் கேட்ட

ஆவணங்களை வழங்கினேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ 2, 4, 5, 9 ஆகியவற்றிலுள்ள கையெழுத்து தன்னுடையது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**16)** மேலும் இவ்வழக்கின் அ.சா.9 தனது சாட்சியத்தில் தான் 2016-ம் ஆண்டு அரசு பணியில் இளநிலை உதவியாளராக இருந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன் என்றும், கடந்த 2014-ம் ஆண்டு சிவகங்கை டாஸ்மாக் பிரிவில் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக இருந்து வந்தேன் என்றும், இந்த வழக்கின் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அனைவரும் டாஸ்மாக் கடையில் அந்த சமயத்தில் வேலை பார்த்து வந்தனர் என்றும், கடந்த 2013-ம் ஆண்டு 25.10.2013-ம் தேதி தங்களது மாவட்ட மேலாளர் அலுவலகத்திலிருந்து கடை எண் 7553-ஐ ஆய்வு செய்ய சென்றார்கள் என்றும், அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தங்களது மாவட்ட அலுவலகத்தில் உள்ளன என்றும், தன் மூலமாக தங்களது மாவட்ட மேலாளர் அந்த ஆவணங்களை பார்வையிட்டார் என்றும், போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக அந்த ஆவணங்களை வாங்கி செல்ல தங்களது அலுவலகத்திற்கு வந்தார்கள் என்றும், அவைகளை தான் எடுத்துக் கொடுத்து தனது மேலாளருக்கு உதவியாக இருந்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**17)** மேலும் இவ்வழக்கில் ஆவணங்களை பரிசீலனை செய்யும் போது, இவ்வழக்கின் 1 முதல் 5 எதிரிகள் டாஸ்மாக் கடை எண்:7553-ல் பணிபுரிந்ததாக அரசுத்தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளபோதிலும், 1 முதல் 5 எதிரிகள் டாஸ்மாக் கடை எண்:7553-ல் பணியாளர்களாக பணிபுரிந்ததற்கான

ஆவணங்களை அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேலும் 1 முதல் 5 எதிரிகளுக்கு வழங்கப்பட்ட பணிகள் மற்றும் பொறுப்புகள் குறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், 1 முதல் 5 எதிரிகளுக்கு டாஸ்மாக் கடை எண்:7553-ல் சம்பவ சமயத்தில் என்ன பணிகள் வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்து அரசுத்தரப்பில் சாட்சியம் அளிக்கப்படவில்லை என்றும், எனவே 1 முதல் 5 எதிரிகள் சட்டத்திற்கு முரணான செய்கையை அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு சில தருணங்களிலும் இருவர் அல்லது மூவர் ஒன்றிணைந்து ஒரு சில தருணங்களிலும் செய்துள்ளனர் என்பதும் அவர்களின் அனைவரின் செய்கையும் டாஸ்மாக் நிர்வாகத்திற்கு சேர வேண்டிய அரசுப்பணத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற இறுதி நோக்கத்தோடு செயல்பட்டுள்ளனர் என்பதை ஆவணங்கள் வாயிலாகவும், சாட்சியங்கள் வாயிலாக நிரூபணம் செய்யப்படவில்லை என்பதும் தெளிவாக தெரிகிறது.

**18)** அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் பொதுவாக ஒவ்வொரு டாஸ்மாக் கடையிலும் வருகை பதிவேடு, பொருள் பதிவேடு, தினசரி சிட்டா மற்றும் வரவு செலவு கணக்கு பதிவேடு, மூவ்மெண்ட் ரிஜிஸ்டர் பராமரிக்கப்படும் என்றால் சரிதான் என்றும், மேற்படி பதிவேடுகள் அனைத்தும் இவ்வழக்கில் தன்னாலோ, மாவட்ட மேலாளராலோ கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 சாட்சியத்தின் வாயிலாக கடை எண்:7553-ல் உள்ள பதிவேடுகள் கைப்பற்றப்படவில்லை என்பதை அறிய முடிகிறது. மேலும் அரசுத்தரப்பில் 1 முதல் 5 எதிரிகள் கடை எண்:7553-ல் பணிபுரிந்ததற்கான

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:57:10 +0530

ஆவணங்களை அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதும், மேலும் 1 முதல் 5 எதிரிகளுக்கு வழங்கப்பட்ட பொறுப்புகள் குறித்த பொறுப்பு பதிவேட்டினையும் அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதும், 1வது எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் வாக்குமூலத்தின் நகல் மட்டுமே அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், அதன் அசல் ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்பதும், மேலும் அ.சா.ஆ.2 ஆவணத்தின் ஆய்வறிக்கையுடன் 23.10.2013ம் தேதி ஆய்வு மேற்கொண்டபோது இருப்பு குறைவு குறித்து 1வது எதிரி கையொப்பம் செய்த ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யப்படவில்லை என்பதும், நகல் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், அ.சா.ஆ.9 ஆவணத்தை பார்வையிடும் போது வெங்கடேஸ்வரன் என்பவர் கடை எண்:7553-ல் 25.10.2013-ல் எந்தவிதமான ஆவணங்களும் கடையில் இல்லை என்பதும், கடையின் சிட்டா பதிவேடு, சரக்கு இருப்பு பதிவேடு, மற்ற ஆவணங்கள் இல்லை என டாஸ்மாக் மாவட்ட மேலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார் என்பதும், ஆனால் மேற்படி வெங்கடேஸ்வரன் என்பவரை அரசுத்தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்பதும் தெரிகிறது. எனவே அரசுத்தரப்பில் 1 முதல் 5 எதிரிகள் டாஸ்மாக் கடை எண்:7553-ல் சம்பவ காலகட்டத்தில் பணிபுரிந்துள்ளார்கள் என்பதையும், 1 முதல் 5 எதிரிகளுக்கு டாஸ்மாக் கடை எண்:7563-ல் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளது குறித்தும், அரசுத்தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை. எனவே 1வது எதிரி மீதான இதச பிரிவு 409-ன் கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், 2 முதல் 5 எதிரிகள்

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:57:20 +0530

21.04.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

மீதான இதச பிரிவு 408-ன் கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று விசாரணை நீதிமன்றம் கூறியுள்ளதை இந்நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறது.

**19)** இவ்வழக்கை பொறுத்தமட்டில் 1 முதல் 5 எதிரிகள் சாட்சிகள் யாரையும் தூண்டவில்லை என்பது அரசுத்தரப்பு சாட்சிகளின் மூலம் அறிய முடிகிறது. எனவே ஏமாற்றும் நோக்கில் 1 முதல் 5 எதிரிகள் அரசுத்தரப்பு சாட்சிகள் எவரையும் தூண்டவில்லை என்பது தெளிவாகிறது. 1 முதல் 5 எதிரிகள் மீதான இதச பிரிவு 420-ன் கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதும், இவ்வழக்கில் 1வது எதிரி பொய் கணக்கு எழுதியதாக இதச பிரிவு 477($A$)-ன்கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது என்பதும், 2 முதல் 5 எதிரிகள் இதச பிரிவு 477($A$) உ/இ 34-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது என்பதும், அரசுத்தரப்பில் 1 முதல் 5 எதிரிகள் கடை எண்:7553-ல் பணிபுரிந்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், மேலும் 1-வது எதிரி பராமரிக்க வழங்கப்பட்ட பதிவேடுகள் குறித்து அரசுத்தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், மேலும் 1-வது எதிரியின் கட்டுப்பாட்டில் பொய் கணக்கு எழுதியதாக சொல்லப்படும் ஆவணத்தையும் அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், மேலும் 2 முதல் 5 எதிரிகள் கடை எண்:7553-ல் 1வது எதிரி பராமரித்து வந்த ஆவணங்களில் பொய் கணக்கு எழுதுவதற்கு எவ்வாறு பொதுவான உட்கருத்துடன் செயல்பட்டுள்ளனர் என்பதை அரசுத்தரப்பு சாட்சிகள் சாட்சியம்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:57:29 +0530

அளிக்கவில்லை என்பதாலும், மேலும் பொய்கணக்கு எழுதியதாக சொல்லப்படும் ஆவணங்களை அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், பொய்கணக்கு எழுதியதாக சொல்லப்படும் காலகட்டத்தில் 1 முதல் 5 எதிரிகளுக்கு வழங்கப்பட்ட பணிகள் மற்றும் ஒப்படைக்கப்பட்ட பதிவேடுகள் குறித்தும் அரசுத்தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், மேலும் பொய்கணக்கு எழுதப்பட்டதாக சொல்லப்படும் பதிவேடுகளை அரசுத்தரப்பில் தாக்கல் செய்யாதது அரசுத்தரப்பு வழக்கை சந்தேதிக்கும் விதமாக அமைந்துள்ளது என்பதாலும், எனவே 1வது எதிரி மீதான இதச பிரிவு 477*(A)*-ன் கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதாலும், 2 முதல் 5 எதிரிகள் மீதான இதச பிரிவு 477(*A*) உ/இ 34-ன் கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**20)** எனவே மேற்கண்ட வகையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் விசாரணை நீதிமன்றம் எதிர்மேல்முறையீட்டாளர்கள்/எதிரிகள் குற்றவாளிகள் இல்லையென்று விடுதலை செய்து தீர்வு கண்டுள்ளதில் சட்டப்படியும், வழக்கு பொருண்மைகளின்படியும் வழங்கியுள்ள தண்டனை தீர்ப்புரையில் குறுக்கிட வேண்டிய அவசியம் ஏதுமில்லை என இந்நீதிமன்றம் கருதுவதால், இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:57:37 +0530

21.04.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

**இறுதியாக,** இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும், சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஆண்டுபட்டிகை வழக்கு எண்.147/2014-ல் கடந்த 09.08.2023-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏபரல் திங்கள் 21-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:57:45 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

**நகல்:**
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சிவகங்கை.

முதன்மை அமர்வு நீதிமன்றம்,
சிவகங்கை.
குற்றவியல் மேல்முறையீட்டு
வழக்கு எண்.103/2024
தீர்ப்புரை நாள்: 21.04.2026